# மு. இராமசுவாமி அவர்களின் நாடகங்கள் வெளிப்படுத்தும்சமூகநிலை

**ஆர். அருள்அரசி**

**ஆய்வாளர்,**

**மதுரை- 625018.** indhuarasi2@gmail.com

58

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியம் மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டது. படிப்பவரின் சிந்தனைக்கும், உணர்வுக்கும், கற்பனைக்கும் விருந்தாக அமைவது.மொழியால் ஆக்கப்பட்டது. தனக்கென ஒரு வடிவினை உடையது. வாசிப்பவரின் எண்ணத்தில் எழுச்சியையும் உள்ளத்தில் மகிழ்ச்சியையும் உண்டாக்கும் ஆற்றல் வாய்ந்தது. இன்புறுத்துவதோடு சிந்திக்கவும், அறிவுறுத்தவும் செய்கின்றது. பொழுது போக்கிற்காகத் தோற்றம் பெற்ற நாடகம் கால வளர்ச்சியில் சமூகச் சிக்கல்களைப் பிரதிபலிக்கும் கலையாக உருப்பெற்றது. பின்னாளில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பெரும்பணியை மேற்கொண்டது. அவ்வகையில் பேராசிரியர் மு.ராமசாமி தமிழில் நவீன நாடகச்செயல்பாடுகளை முன்னெடுத்த முன்னோடி நாடகச்செயற்பாட்டாளர்களில் ஒருவர். நிஜ நாடகஇயக்கம் மூலம் பல நாடகங்களை எழுதியும் நடித்தும் வருகிறார். இன்றிய சமூக பிரச்னையை மையமாக வைத்து நாடகங்களை இயற்றிவருகிறார். நாடகம் வெறும் பொழுதுபோக்கு கலையாக மட்டும்மல்லாமல் மக்களை சிந்திக்க தூண்டும் விதமாக அமைத்து அதை இன்றிய தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் விதமாக நாடகங்களை நடத்துகிறார். அவ்வகையில் மு.ராமசாமி அவர்களின் நாடகங்கள் வெளிப்படுத்தும் சமூக நிலை மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்வியல் பிரச்சனைகளை எடுத்தியம்புவது கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் தன்னகத்தே கொண்டது. இவற்றுள் கடந்தகாலத்தையும்நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் எடுத்துக்காட்டுவது நாடக இலக்கியமாகும்.சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வு, அரசியல் நிலை முதலான சமூகச் செய்திகளைத் தம் நாடகங்களில் அமைத்துக் காட்டியவர் மு. இராமசுவாமி அவர்கள். தமது நவீன நாடகங்களில் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை அழுத்தமாகப் பதிவுசெய்துள்ளார்.அவரது நாடகங்கள் வெளிப்படுத்தும் சமூகநிலையை எடுத்துரைப்பதாய் இக்கட்டுரை அமைகிறது.

- சாதியம்
- அறியாமை
- வறுமை
- அரசியல் நிலை
- அநீதிக்கு ஆட்படுதல்

**சாதியம்**

நமது சமூகத்தில் சாதிய வேறுபாடு தொடக்கத்தில் இருந்தே அமைந்துள்ளது. அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு ஏற்றபடியான சமூகக் கட்டமைப்பை உருவாக்கினர். அதிகார மையத்திலிருப்போரின் மறைநூல்கள் இதனை அழுத்தமாக வலியுறுத்தின. அவர்கள் படைத்த வேதங்களுள் ஒன்று ரிக் வேதமாகும்.

பிரம்மா மனிதரைப் படைக்கும் போது தனது நெற்றியிலிருந்து பார்ப்பனர்களையும், தோள்பட்டையிலிருந்து சத்திரியர்களையும், தொடையிலிருந்து வைசியர்களையும், பாதத்திலிருந்து

சூத்திரர்களையும் படைத்தார் என்று குறிப்பிடுகிறது. இந்த நால் வகையினரை மனிதர்கள் என்றும் ஐந்தாவது வகையினராகப் பஞ்சமர்கள் என்றும் குறிப்பிடுகிறது. இவர்களைப் பிற படைப்புகளுடன் படைக்கப்பட்டதாகக் கூறி இழிவுபடுத்துகிறது.

தமிழின் முதல் இலக்கண நூலாகக் கருதப்படும் தொல்காப்பிய நூல் நான்கு பிரிவுகள் பற்றிக் கூறுகிறது.

**“அஞ்சு வெரலும் ஒண்டு போல இல்லெ : மேடுன்னு இருந்தா பள்ளம்னு ஒண்ணு இருக்கத்தான் செய்யும். வேறுபாடுங்கறது தான் உலக இயற்கை!”**(விடாது கருப்பு,மு.இராமசுவாமி, 2004) என்று விடாத கருப்பு நாடகத்தில் இடம் பெறும் உரையாடல் சாதிப் பாகுபாட்டை எடுத்துரைக்கும் விதமாய் அமைகிறது.

**“இதெல்லாம் அடிம செய்ற வேல … வந்து செய்டான்னா செஞ்சிட்டு போறான்.”**(சாம்பன், மு. இராமசுவாமி,2001) என்ற ஆதிக்க சாதியினரின் கூற்று சமூகத்தில் உருவாக்கப்பட்ட தொழில் அடிப்படையிலான வேறுபாட்டை உறுதி செய்கிறது.

**அறியாமை**

தனக்கு இழைக்கப்படும் இன்னல்களை அறியாமல் இருப்பதும், அறிந்தும் அதிலிருந்து வெளிவராமல் விதியென வாழ்வதும் அறியாமை ஆகும். அறியாமை என்னும் இருளைப் போக்கும் வல்லமை கல்விக்கு உண்டு. இன்றைய சூழலில் கல்வி கற்றவர்களும் அறியாமை என்னும் இருளில் மூழ்கிக் கிடக்கின்றனர்.

**“சந்தையில் மாடாய் - யாம்**
**சந்ததம் தங்கிட வீடுமில்லாமல்**
**சிந்தை மெலிந்தோம் - எங்கள்**
**சேவைக்கெலாம் இது செய்நன்றி தானே!”**

“பெரியவர்: **கவிஞர் தம்பி! எங்களுடைய கஷ்ட நஷ்டத்தில் கூட இருந்து**
**பாட்டுப் பாடி மகிழ்ச்சி தர்றீங்க. சந்தோஷந்தான். ஆனா,**
**எல்லாம் அன்னைக்கே எழுதி வச்சது. தலையெழுத்தை**
**யாரால மாத்த முடியும் தம்பி”** (புரட்சிக்கவி, மு. இராமசுவாமி,2015)என்று வரும் பகுதி அறியாமையை எடுத்துரைக்கிறது.

**வறுமை**

நாட்டில் உள்ள பெரும்பாலான மக்கள் வறுமை நிலையிலேயே இருக்கின்றனர். சமூகத்தில் நிலவுகின்ற ஏற்றத்தாழ்வுக்கு வறுமையும் ஒரு காரணமாக அமைகிறது. மனிதன் வறுமை என்னும் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் பெரிதும் போராடுகிறான்.எனினும் உழைப்புச் சுரண்டலுக்கு ஆட்படுவதால் வறுமைக்குத் தள்ளப்படுகிறான். அவ்வறுமை அவனுடைய நல்லியல்புகளை மாற்றிவிடக் கூடியது. அதனால் தான்,

**“வறுமை கொடிது அதனினும் கொடிது இளமையில் வறுமை”**(தனிப்பாடல்திரட்டு, புலவர் சிவ. கன்னியப்பன்,2004)என்றார் ஔவையார்.

**“என் பெற்றோரைப் பிரிந்ததிலிருந்து பசி என்னும் உயிர் கொடுமை பற்றி நன்றாகவே அறிந்து**

**விட்டேன். பசிக் கொடுமையால் சிறிது சிறிதாக உயிர் பிரியும் வேளையில் ஒரு முதியவர் அளித்த ஒரு கவளச் சோறுதான் எனக்கு திரும்பவும் உயிர் தந்தது.”** (ஆபுத்திரன், மு. இராமசுவாமி, 2008 ) என்று ஆபுத்திரன் கூறும் வரிகளும் பசியின் கொடுமையை எடுத்துரைப்பதாக அமைகின்றன.சாம்பானில்,

**“புள்ள குட்டியெல்லாம் அது அது தூக்கத்துல பொலம்புதுடா … ராத்திரி புள்ளைகளுக்குச் சோறு தண்ணி குடுத்தாளா இல்லியான்னு தெரியலடா”**(சாம்பன், மு. இராமசுவாமி, 2001)என்று மாணிக்கத்திடம் சாம்பான் புலம்பும் காட்சியும் வறுமையின் உச்சக்கட்டத்தைக் காட்டுவதாய் அமைகின்றன.

ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் வறுமையை ஒழிக்க புதுப்புது கொள்கைகள் வாக்குறுதியாக வழங்கப்படுகின்றன. ஒரு புறம் வளமை ஏறிக் கொண்டும் மறுபுறம் வறுமை கூடிக் கொண்டும் செல்லும் அவல நிலைதான் நாட்டில் நிகழ்ந்து வருகின்றன. மக்கள் வறுமையைத் தங்களின் விதியென வாழாமல் அதை எதிர்த்துப் போராடி முன்னேற வேண்டும் என்ற கருத்தை எடுத்துரைப்பதாய் மு. இராமசுவாமி அவர்களின் நாடகங்கள் நிறைவு பெறுவதைக் காணமுடிகிறது.

**அரசியல் நிலை**

உழைக்கும் மக்களின் உழைப்பை வரி என்னும் பெயரில் சுரண்டி சுகம் காணும் அரசின் சூழ்ச்சி முகமூடியை,

**“அது தான் ஒப்பந்தம் ! பணம் பணமா கைமாறும் போது நூறு ரூபாங்கறது எத்தனெக் கைமாறுனாலும் அதன் மதிப்பு நூறு ரூபாதான் … ஆனா பணமில்லாம வங்கிப் பரிவர்த்தனை அல்லது மின் பரிவர்த்தனையிலே நூறு ரூபாக் கைமாறும் போது சேவை வரி … அப்படித் தான் சொல்லுது அரசு! …”**(விடாது கருப்பு, மு. இராமசுவாமி, 2004 ) என்ற கூற்று எடுத்துரைக்கிறது.

மக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசு அந்நியக் கார்ப்பரேட்டோடு கைகோர்த்துக் கொண்டு மக்களுக்குத் துரோகம் செய்யும் நிலையை,

**“பாக்கறதுக்கு ஜி.எஸ்.டி. மசோதாங்கறது தனியான ஒண்ணாத் தெரியும் … பொது சிவில் சட்டங்கறது இன்னொரு தனியான ஒண்ணாத் தெரியும் … மதிப்பு நீக்க நடவடிக்கெங்கறது, இதுக்கெல்லாம் சம்பந்தமேயில்லாத தனியான ஒண்ணாத்தான் தெரியும் … நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கைங்கறதும் அப்படித்தான் … எல்லாமே அந்நியக் கார்ப்பரேட்களுக்குச் சேவகம் செய்றதுக்குத் தான்!”**(விடாது கருப்பு, மு. இராமசுவாமி, 2004) எனத் தெளிவாக விளக்குகிறார்.அரசின் செயல்பாட்டைக் கேள்விக்குள்ளாக்குகிறார்.

**“நான் சொல்றேன் … தன் … சொந்த மதத்து மக்களயே பார்ப்பான்; சத்ரியன்; வைசியன்; சூத்ரன்; பஞ்சமன்னு பொறப்புலயே பாகுபடுத்திப் பிரிச்சி வச்சிருக்ற இந்து மதத்தெ, அறிவுள்ள எவன் ஒத்துக்குவான்?”**(விடாது கருப்பு, மு. இராமசுவாமி, 2004) **என்ற வினாவை முன் வைக்கிறார்.**

இவ்வாறாக இன்றைய அரசியல் நிலையை எடுத்துரைத்து மக்களின் சிந்தனையைத் தூண்டுவதாய் ‘விடாது கருப்பு’நாடகம் அமைந்துள்ளது.

**அநீதிக்கு ஆட்படுதல்**

ஆதிக்க வர்க்கத்தினர் அடித்தட்டு மக்களை அடக்கி ஆளவே விரும்புகின்றனர். அவ்வாறு ஆள்வதற்கு ஏதுவாக அடித்தட்டு மக்கள் தமது உரிமைகளைப் பெறவிடாமல் தடுக்கின்றனர். நீதிக்குப் புறம்பான செயல்களில் ஈடுபடுகின்றனர். இச்செயல்பாடுகளை மு.இராமசாமி அவர்களின்

நாடகங்களில் இடம்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

இந்திரன் தர விரும்பிய வரத்தினை ஆபுத்திரன் பெற மறுத்ததால்,

**"ஆபுத்திரா ! எந்த ஆணவத்தால் நீ தேவர்களை அவமதிக்கின்றாயோ ... அந்த பெருமை உனக்கு இல்லாமல் போகும்"**(விடாது கருப்பு, மு. இராமசுவாமி, 2004) என்ற இந்திரனின் கூற்றுப் பகுதியும் அதிகார வர்க்கத்தின் அடக்க முறையை வெளிப்படுத்துகிறது.

உழைப்புச் சுரண்டல் என்ற அநீதியில் சிக்கித் தவிக்கும் மக்களின் நிலையைச் சாம்பான் நாடகம் எடுத்துக்காட்டுகிறது.

**"யேய் ... அதான் வருஷ கூலி வாங்கிறல்லடா ... எடையில வேற நொட்டனுமா ?என்ற மேல்சாதியின்"**(சாம்பன், மு. இராமசுவாமி, 2001 ) கூற்றின் மூலம் அதிகாரவர்க்கத்தின் மனநிலை அறிய முடிகிறது.

**முடிவுரை**

சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளைச் சாம்பான், புரட்சிக்கவி, ஆபுத்திரன் முதலான நாடகங்களின் வழி வெளிப்படுகின்றனர். மக்களின் அறியாமையே அவர்களது வறுமைக்குக் காரணம் என்பதை நுட்பமாக எடுத்துரைக்கிறார். மக்கள் உழைப்புச் சுரண்டலுக்கும், அநீதிக்கும் ஆட்படும் நிலையை நாடகங்கள் வெளிப்படுத்துகின்றன. மக்களுள் சிலர் அதனை உணர்ந்து விழிப்புணர்வு பெற்றுள்ளதையும் எடுத்துக் காட்டியுள்ளார். 'விடாது கருப்பு'என்னும் நாடகத்தின் வழி இன்றைய அரசியல் சூழல், அரசியல் தலைவர்களின் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறார். புதிய புதிய திட்டங்களின் வழி மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியையும் அவர்களின் இயலாமை நிலையையும் எடுத்துக் காட்டுகிறார். மக்கள் விழிப்புணர்வு பெற்றாலும் ஆதிக்க வர்க்கத்தினரின் வெறிச்செயல்களையும் அதனால் அப்பாவி மக்கள் தொல்லைக்கு உள்ளாகும் அவல நிலையை நாடகங்களில் பதிவு செய்துள்ளார்.

**துணை நின்ற நூல்கள்**


1. இராமசுவாமி.மு, சாம்பான் ஒத்திகை (நாடகத்தொகுப்பு), 58, ராம் நகர், மாதாக்கோட்டை சாலை, தஞ்சாவூர்-613005. முதல் பதிப்பு, 2001.
2. இராமசுவாமி.மு, சாபம்! விமோசனம்? (நாடகத்தொகுப்பு), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்தூர், சென்னை-600098, முதல் பதிப்பு, ஆகஸ்ட், 2011.
3. இராமசாமி.மு, ரௌத்திரம்பழகு, நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை-600 098. முதல்பதிப்பு, மார்ச், 2015.
4. இராமசாமி.மு, மொழி- நாடகமொழி-திரைமொழி (கட்டுரைத்தொகுப்பு), நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ் (பி) லிட்., சென்னை-600 098. முதல்பதிப்பு, மார்ச், 2018.
5. புலவர்சிவ.கன்னியப்பன், தனிப்பாடல்திரட்டு, முல்லைநிலையம், சென்னை-600017, முதல்பதிப்பு, 2004.